முச்சந்தி முரளி




Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 187

வெள்ளிக்கிழமை
31 மே 2024

வைகாசி 18 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

தையிட்டி விகாரையில்

## மேலதிகக் கட்டடங்களா? அப்படி எதுவும் இல்லை!

மறுக்கிறார் பதில் மாவட்டச் செயலர்

யாழ்ப்பாணம், மே 31
யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு மேலதிகமாக, அங்கு வேறுசில சட்டவிரோதக் கட்டடங்களும் அமைக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நேற்று குற்றஞ்சாட்டப்பட்டது.

11

தையிட்டி விகாரையில்

# சட்டவிரோதக் கட்டடம்; உறுதிப்படுத்தியது படம்!

பதில் மாவட்டச் செயலரின் பச்சைப்பொய் அம்பலம்


தையிட்டி விகாரைக்கு அருகில் கட்டப்பட்டுவரும் சட்டவிரோதக் கட்டடம்
படம்:- உதயன் ஊடகப் புலனாய்வுப் பிரிவு

யாழ்ப்பாணம், மே 31
தையிட்டியில் திஸ்ஸ விகாரைக்கு மேலதிகமாக, அந்தப் பகுதியில் வேறுசில சட்டவிரோதக் கட்டடங்களும் அமைக்கப்பட்டுவருகின்றன. இதனை எமது 'உதயனின்' ஊடகப் புலனாய்வு அணி அங்கு சென்று இரகசியமான முறையில் பதிவு செய்த ஒளிப்படங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.
குறித்த விகாரையில் சட்டவிரோதக் கட்டடங்கள் அமைக்கப்படுவதாக நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் குற்றச்சாட்டொன்று முன்வைக்கப்பட்டது. அதற்கு யாழ்ப்பாணம் மாவட்டப் பதில் மாவட்டச் செயலர்,

11

## கசிப்புடன் நேற்று இளைஞர் கைது!

கிளிநொச்சி, மே 31
கிளிநொச்சிப் பகுதியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு, மாணவர்களின் புத்தகப்பையில் கசிப்பைக் கடத்திய இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

09

## தவறான முடிவெடுத்து யுவதி பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், மே 31
வடமராட்சி வதிரிப் பகுதியில் யுவதியொருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.
தனது வீட்டில், தூக்கிட்ட நிலையில் மீட்கப்பட்ட யுவதி பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோதே அவர் ஏற்கனவே உயிரிழந்து

09

# காணிகளைச் சுவீகரிக்க யாழ்ப்பாணத்தில் தடை!

ஒருங்கிணைப்புக் குழுவில் தீர்மானம்

**யாழ்ப்பாணம், மே 31**
**யாழ்ப்பாணத்தில் முப்படையினருக்காகவோ அல்லது பொலிஸாருக்காகவோ காணி சுவீகரிப்பை மேற்கொள்வதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தடைவிதிக்கப்பட்டுள்ளது.**

11



## ஐ.எஸ்ஸுடன் தொடர்பு; இருவர் கைது!

கொழும்பு, மே 31
ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்பைப் பேணினார்கள் என்ற குற்றச்சாட்டில் மேலும் இரண்டு சந்தேக நபர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்

11

சுழிபுரம் திருவடிநிலையில்

## காணி சுவீகரிப்பு தடுத்து நிறுத்தம்

யாழ்ப்பாணம், மே 31
சுழிபுரம் திருவடிநிலைப் பகுதியில் கடற்படை முகாமுக்காக, தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணி

09

யாழ். - தீவகம் இடையேயான

## அம்புலன்ஸ் படகுச்சேவை: கைவிடுவதற்குத் தீர்மானம்!

பாராமரிப்புச் செலவே காரணம்

யாழ்ப்பாணம், மே 31
யாழ்ப்பாணம் - தீவகங்களுக்கு இடையில் மேற்கொள்ளப்படும் அம்புலன்ஸ் படகுச்சேவை நிறுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் - தீவகங்களுக்கு இடையிலான படகுச்சேவை கடந்த 2006 ஆம் ஆண்டு முதல் கியூமெடிக்கா தொண்டு நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இந்த நிலையில்,

11

## வாள்வெட்டை தடுப்பதற்கே சென்றாராம் பொலிஸ்காரர்

தொல்புரத்தில் சண்டித்தனம் காட்டிய பொலிஸுக்கு வக்காளத்து வாங்கிய அதிகாரி

யாழ்ப்பாணம், மே 31
தொல்புரம் மத்தி பகுதியில், வாளுடன் பிறரை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட பொலிஸ் அலுவலர், வாள்வெட்டுக்காக வந்தவர்களிடம் வாளைப்பறித்து அவர்களை விரட்டினார் என்று காங்

09

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உறவுகளைத் தேடி நேற்று கவனவீர்ப்பு

**கிளிநொச்சி, மே 31**

**காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் நேற்றுக் கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

இந்தப் போராட்டம் கிளிநொச்சி மருத்துவமனைக்கு அருகில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்க அலுவலகத்துக்கு முன்பாக ஏ-9 வீதியில் முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவுகளின் படங்களை ஏந்தியவாறு, காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோஷத்துடன் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. (எ-113)

# வடிகாலில் பெண்ணின் சடலம் மீட்பு

கொழும்பு, மே 31

கொழும்பு கிராண்ட்பாஸில் கழிவுநீர் வடிகாலில் இருந்து பெண்ணொருவரின் சடலம் நேற்றுமுன்தினம் கண்டெடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் 45 முதல் 50வயதுக்கு இடைப்பட்டவர் என்றும் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

# குடியுரிமை பெற புதிய வழிமுறை

## வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, மே 31

இலங்கை குடியுரிமையை கைவிட்டு சென்றவர்கள், இலங்கையை பூர்வீகமாகக் கொண்டவர்கள் மற்றும் வெளிநாட்டுக் குடியுரிமையைக் கொண்டவர்களுக்கு இலங்கையில் நிரந்தர வதிவிடத்தைப் பெற்றுக்கொள்ளும் புதிய வழிமுறைகள் அடங்கிய வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சால் இந்த வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையை பூர்வீகமாகக் கொண்டநபர் அல்லது குடியுரிமைச் சட்டத்தின் பிரிவு 19, 20 அல்லது 21 இன் கீழ் குடியுரிமை நிறுத்தப்பட்டவர், அதேபோல் ஒரு வெளிநாட்டு வாழ்க்கைத் துணைவர் திருமணமாகி 6 மாதங்களுக்குப் பிறகு புதிய விதிமுறைகளின் கீழ் விண்ணப்பிக்கலாம்.

இலங்கை வம்சாவளியைச் சேர்ந்தவர் என விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் முதன்மை விண்ணப்பதாரருக்கு ஆயிரம் டொலர் கட்டணம் அறவிடப்படுவதுடன் இலங்கையர் அல்லாத வாழ்க்கைத் துணை மற்றும் குழந்தைகளுக்கு 400 டொலர் கட்டணம் அறவிடப்படும்.

வர்த்தமானி அறிவித்தலின் படி, 5 வருடங்களுக்கு முன்னர் திருமணம் இரத்துச் செய்யப்பட்டால், நிரந்தர வதிவிட அந்தஸ்து தானாகவே இரத்துச் செய்யப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# ஐ.எஸ்.ஐ.எஸ். விவகாரம் வெளியான 'திடுக்' தகவல்

கொழும்பு, மே 31

குஜராத்தில் கைது செய்யப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளுடன் தொடர்புடைய 4 இலங்கையர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் மேலும் சில திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன என்று குஜராத் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் நால்வர் தங்கியிருந்த வீடுகளில் சந்தேகத்துக்குரிய பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அதற்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பயங்கரவாதத் தாக்குதல்களை நடத்துவதற்காக அவர்களால், பஞ்சாபியிலுள்ள பாகிஸ்தான் எல்லையில் ஆளில்லா விமானம் ஊடாக ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக குஜராத் பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்காக குஜராத் பயங்கரவாத தடுப்புப் பிரிவின் 3 குழுவினர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். (ச-இ)

சட்டவிரோத தங்க இறக்குமதி

# 5 நிறுவனங்களுக்கு எதிராக அபராதம்!

கொழும்பு, மே 31

சட்டவிரோதமாக தங்கத்தை இறக்குமதி செய்த ஐந்து நிறுவனங்களுக்கு ஆயிரத்து 243 மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

நேரடி இறக்குமதியின்றி, மூன்றாம் தரப்பினரிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் தங்க ஆபரணங்களுக்கும் அபராதம் விதிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

வருடத்தின் இதுவரையிலான காலப்பகுதிக்குள், இலங்கைக்கு சட்டவிரோதமான முறையில் தங்கத்தை இறக்குமதி செய்த ஐந்து நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்றும், அந்த நிறுவனங்களுக்கு ஆயிரத்து 243 மில்லியன் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# இந்தியக் கப்பலில் எண்ணெய் கசிவு!

கொழும்பு, மே 31

அண்மையில் இந்திய நிறுவனமொன்றுக்குச் சொந்தமான கப்பல் பழுது பார்ப்பதற்காக கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ள நிலையில் எரிபொருள் கசிவு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

எரிபொருள் கசிவு ஏற்பட்ட கப்பல் பொறுப்பேற்கப்பட்டுள்ளது என்று கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

கப்பலில் இருந்து எரிபொருள் கசிவு ஏற்பட்டமை தொடர்பில் கப்பலுக்குச் சொந்தமான நிறுவனம் மற்றும் காப்புறுதி நிறுவனத்துக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அதிகாரசபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் கீழ் இதற்கான நட்டஈடு பெறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# சிகரெட் பாவனையால் நாளாந்தம் 50 பேர் பலி!



சிகரெட் பாவனையால் நாட்டில் நாளாந்தம் 50 பேர் உயிரிழக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 20 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என்று மதுபானம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

உலக புகையிலை எதிர்ப்பு தினம் இன்று கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையில் விடுக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகையிலைத் தொழிலின் குறுக்கீட்டிலிருந்து எமது சிறுவர்களை பாதுகாப்பதே இந்த ஆண்டு உலக புகையிலை எதிர்ப்பு தினத்தின் தொனிப்பொருளாகும்.

உலகில் சிகரெட் பாவனை குறைவடைந்து வரும் நாடுகளில் இலங்கையில் நல்ல போக்கு காணப்பட்டாலும் இன்னும் சுமார் 1.5 மில்லியன் மக்கள் சிகரெட் பாவனையில் ஈடுபடுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் சிகரெட் பயன்படுத்துவதற்கு பன்னாட்டு புகையிலை நிறுவனங்கள் பல தந்திரங்களை மேற்கொண்டு வருகின்றன என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# மருத்துவக்கழிவுகள் எரியூட்டல் ; கண்காணிக்க பொறிமுறை தேவை

## கஜேந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

அரியாலையில் பொதுமக்கள் குடியிருப்புகள் மத்தியில் உள்ள காணியில் மருத்துவக் கழிவுகள் எரியூட்டப்பட்டமை சுகாதாரத்துக்கு தீங்கு விளைவிக்கும். எதிர்காலத்தில் இவ்வாறானசெயற்பாடுகள்வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். அதைக் கண்காணிக்க பொறிமுறை ஒன்று அவசியம்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளரிடம் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த பணிப்பாளர், அந்தக் காணி மருத்துவமனைக் காணி என்பதாலேயே அங்கு அவை சேமிக்கப்பட்டிருந்தன. மக்கள் போராட்டம் நடத்திய மறுநாளே அங்கிருந்த கழிவுகள் மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டு தற்காலிகமாக சேமித்து வைக்கப்பட்டுள்ளன. அவை எரியூட்டிகள் மூலம் எரிக்கப்படுகின்றன என்று தெரிவித்தார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர், இந்த விடயத்தை நியாயப்படுத்தாது, கவனமாகக் கையாள வேண்டும். மருத்துவமனைக் காணியாக இருந்தாலும் அவதானமாகச் செயற்பட்டிருக்கலாம். இனி இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாது பார்த்துக்கொள்ளுங்கள் என்று தெரிவித்தார். (எ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 வருடங்கள் கடந்தும் தமிழருக்கு நீதியில்லை

## பிரித்தானிய தமிழர் பேரவை சுட்டிக்காட்டு

**கொழும்பு, மே 31**

**15 வருடங்கள் கடந்தும் ஈழத் தமிழ்மக்களுக்கு எதிராக நிகழ்ந்த கொடூரக் குற்றங்களுக்கு நீதி கிடைக்கவில்லை. குற்றங்கள் இன்று வரை நீள்கின்றது என்று பிரித்தானிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் பிரித்தானிய தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2009இல் இடம்பெற்ற குற்றங்கள் இலங்கையில் மீண்டும் நடைபெறாமல் இருப்பதற்கு பொறுப்புக்கூறல், மனித உரிமைகள், நீதியை நிலைநாட்டல் என்ற அடிப்படைகளைக் கொண்ட நிலையான அமைதிக்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும் என சர்வதேசத்துக்கு எடுத்துக் கூறியிருந்தோம்.

ஆயினும் தமிழ்மக்களின் தாயகம், அரச பயங்கரவாத பாதுகாப்புப் படையினரால் கொடூர அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுகின்றது.

அவர்களின் நினைவு கூரல் உரிமை கூட மறுக்கப்படுகின்றது.

இது உயிர் பிழைத்தோருக்கும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கும் மிகவும் மன உளைச்சலைக் கொடுக்கின்றது. ஈழத்தமிழர்களுக்கு 15 வருடங்கள் கடந்தும் இன்னமும் நீதி மறுக்கப்பட்டே உள்ளது- என்றுள்ளது. (ச-இ)

# தோல்வியைத் தவிர்க்கவே தேர்தல்கள் ஒத்திவைப்பு

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, மே 31

மக்கள் ஆணையுடன் வெற்றிபெற முடியாது என்பதை தெரிந்ததாலே ஜனாதிபதித் தேர்தலை இரண்டு வருடங்களுக்கு பிற்போடவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி கோரியுள்ளது. இது வெட்கப்படவேண்டிய யோசனையாகும்.

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் அந்தக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் போட்டியிடக்கூடிய வேட்பாளரும் தேர்தலை பிற்போடவேண்டும் என்ற கூற்றின் மூலம் தேர்தல் தோல்வியை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

நாட்டு மக்களில் பெரும்பாலானவர்களின் நம்பிக்கை தற்போது சஜித் பிரேமதாஸவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. அடித்தள மக்களின் ஆதரவு சஜித் பிரேமதாஸவுக்கு அதிகரித்து வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# 4 விளையாட்டு சங்கங்களுக்கு தற்காலிக தடை

கொழும்பு, மே 31

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் 4 தேசிய விளையாட்டுச் சம்மேளனங்களின் பதிவுகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கை சைக்கிள் சம்மேளனம், ரக்பி சங்கம், மோட்டார் வாகன சம்மேளனம் மற்றும் வலைப்பந்தாட்ட சம்மேளனம் ஆகிய சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களின் பதிவுகள் இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளன. (ச-இ)

# வீடுகளைச் சீரமைக்குமாறு அமைச்சர்கள் கோரிக்கை

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக மாதிவெலவில் அமைக்கப்பட்டுள்ள வீட்டுத் தொகுதியில் வசதிகள் குறைவாக உள்ளன என்று அமைச்சர்கள் சிலர் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம் அண்மையில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அங்குள்ள பெரும்பாலான வீடுகள் சேதமடைந்துள்ளன என்றும், மழை காலங்களில் வீடுகளுக்குள் நீர் வழிகின்றது என்றும் அவர்கள் கூறியுள்ளனர். அமைச்சர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லங்களில் குடும்பத்தினருடன் தங்கப் போதுமான இடவசதி இல்லை என்றும், வீடுகளை புதுப்பித்துத் தரவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-இ)

## திடீரென முடங்கியது 'ஸ்டார் லிங்'

கொழும்பு, மே 31

உலகம் முழுவதும் ஸ்டார் லிங் (Starlink) இணையச் சேவை நேற்று முன்தினம் முடங்கியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் சுமார் 41 ஆயிரத்து 393 ஸ்டார் லிங் இணைய இணைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன. தற்போது ஸ்டார் லிங் இணையச் சேவை முழுமையாக மீட்டமைக்கப்பட்டுள்ளதாக ஸ்டார் லிங் நிறுவனத்தின் உத்தியோகபூர்வ 'எக்ஸ்' பக்கத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பொருளாதார சட்டவரைவில் சுயாதீனத்தன்மை இல்லை!



## கம்மன்பில சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 31

ஜனாதிபதியால் நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள பொருளாதார நிலைமாற்றம் சட்டவரைவில் மூர்க்கத்தனமான விடயங்களே உள்ளடக்கப்பட்டுள்ளன என்று நாடாளுமன்ற உறுப்பினரான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தச் சட்டமூலத்தின் ஊடாக ஸ்தாபிக்கப்படும் ஆணைக்குழுக்களை ஜனாதிபதி நியமிக்கிறார். அப்படியாயின் எவ்வாறு சுயாதீனமான முறையில் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கப்படும். சர்வதேச நாணயநிதியத்தின் பரிந்துரைக்கு அமைய இந்தச் சட்டவரைவு தயாரிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது.

இந்தச் சட்டமூலம் சர்வதேச நாணயநிதியத்தின் பரிந்துரைகளுக்கு முரணானது - என்றார். (ச-இ)

# புதினம் தெரியுமோ?

பறைஞ்ச வாயும் கிழிந்த சீலையும் கிடவா. அறாவிலை 'ரேட்டுக்கு' ஓட்டோ ஓடுறவையும் இப்பிடித் தான். அவையும் சும்மா இருக்காமல் தவிச்ச முயலை அடிக்கத் தான் எப்பவும் காவல் காத்துக்கொண்டு இருப்பினம். அப்பிடி யாழ்ப்பாணத்தில ஓட்டோக்காரர் சொன்ன ரேட்டுக்கு வேறவழியில்லாமல் ஆக்கள் ஏறுற இடங்களில ஒண்டு ரெயில்வே ஸ்ரேசன். தூர இடத்தில இருந்து யாழ்ப்பாணம் வாறவை, யாழ்ப்பாணம் ரெயில் ஸ்ரேசனில இறங்கி வெளியில வந்தவுடனேயே அவையை ஓட்டோக்காரர் சுத்திவளைச்சுப்போடுவினம். பக்கத்தில உள்ள சந்திக்கு போறதெண்டால் கூட முந்நூறு ரூபாவுக்கு குறையாம வராயினம். அரைக்கட்டை தூரத்தில இருக்கிற பஸ் ஸ்ராண்டுக்குப் போறதெண்டால் ஐநூறு ரூபாவை விட கூடத்தான் சொல்லுவினம். அவையின்ர மூட்டுக்கு ஏத்தபடியோ இல்லாட்டி வாற சனத்தின்ர தொகைக்கு ஏத்தபடியோ இந்த ஓட்டோக்களின்ர ரேட்டுகளும் ஏறி இறங்கும். கூடச் சனம் வந்தால், எப்பிடியும் ஓட்டோவுக்கு அவை அந்தரப்படுவினம். அதைவைச்சு ரேட்டைக் கூட்டிச் சொல்லி, அவையை ஏத்திக்கொண்டு போவினமாம். எல்லா ஓட்டோக்களுக்கும் மீற்றர் பூட்டோணும் எண்டு முந்தி இருந்த ஜீ.ஏ. ஓர்டர் போட்டவர். இப்ப அந்த ஓர்டரை எல்லாரும் குப்பையில போட்டிட்டு, தங்கட இஷ்டப்படி ரேட்டை ஏத்தி, இறக்கி விளையாடுகினம்.

இப்பிடி ரெயில்வே ஸ்ரேசனில ஓட்டோக்காரர் சொன்ன ரேட்டுக்கு சனம் தலையாட்டுறதுக்கு முக்கியமான காரணம், அங்க மினிபஸ்ஸோ இல்லாட்டி சீ.ரி.பி. பஸ்ஸோ வாறேல. மற்ற எல்லா மாவட்டங்களிலையும் ரெயில்வே ஸ்ரெசனில இருந்து ஒரு எட்டு வைச்சாலே ஏதோ ஒரு பஸ் வாற இடத்துக்குப் போடலாம். ஆனா யாழ்ப்பாணத்தில மட்டும் ரெயில்வே ஸ்ரேசனில இருந்து அரைக்கட்டைக்கு அங்கால தான் பஸ் ஸ்ராண்ட் இருக்குது. பயணக்களைப்போட , 'பாக்'குகளைத் தூக்கிச் சுமந்துக்கொண்டு அவ்வளவு தூரம் நடந்து போறதுக்குள்ள சீவன் போடும். சரி, பஸ் ஸ்ராண்டுக்குப் போகாமல் ரெயில்வே ஸ்ரேசனில இருந்து தண்டவாளத்தையொட்டிக்கொண்டு போற ஒழுங்கையால போய் மெயின் றோட்டில ஏறினால் அதிலவாற பஸ்களில ஏறலாம்தான். ஆனால் அதிலையும் ஒரு சிக்கல் இருக்கு. பஸ் ஸ்ராண்டில இருந்து வெளிக்கிடேக்கையே எல்லாப் பஸ்களும் ஆக்களை அடைஞ்சு அடைஞ்சு பிள்ளைத்தாச்சியளின்ர வயிறு மாதிரி வீங்கிப் பெருத்துப்போய் அசைஞ்சபடிதான் வரும். அந்தச் சனத்துக்குள்ள பஸ்ஸில ஏறுறதெண்டால், எல்லாரும் ஒட்சிசன் சிலிண்டரோட தான் போகோணும். அந்தளவுக்கு மூச்சுக் கூட விடேலாபடிக்கு சனத்தை அடைஞ்சிருப்பினம். அப்பிடியெண்டால், பஸ் ஸ்ராண்டுக்குப் போனால் மட்டும்தான் சீற்றைப் பிடிச்சு இருந்து போகலாம்.

இதெல்லாம் ஓட்டோக்காரருக்கு நல்லாத்தெரியும். அதாலதான் செத்தமாட்டில பாலைக் கறக்கிற விளையாட்டுக் காட்டுகினம். ரெயினுக்குள்ள அவ்வளவு நேரம் பயணப்பட்டு, ஆய்ஞ்சு ஓய்ஞ்சு வாறவையிட்ட என்ன ரேட் சொன்னாலும் ஏறுவினம் எண்ட நம்பிக்கை அவைக்கு. மீற்றரைப் பூட்டுங்கோ, நியாயமான ரேட்டைக் கேளுங்கோ எண்டு சொல்லுறதை ஒருக்காலும் அங்க நிக்கிற ஓட்டோக்காரர் கேக்கப் போறதில்லை. அவை நல்லா ரேட்டை ஏத்திச் சொல்லி ருசி கண்டிட்டினம். அதால, இதை நிப்பாட்ட ஒரேவழி, ரெயின் வாற நேரங்களில மினிபஸ்காரரோ, சீ.ரி.பி. காரரோ சோர்ட் சேர்விஸ்( குறுந்தூர) பஸ்களை ஓடவிடோணும். அப்பிடிச்செய்தால்தான் உந்தப் பகல் கொள்ளையை நிப்பாட்ட முடியும். உரியவை செய்வினமோ?



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவீரன் சங்கிலி மன்னன்



**தமிழ் மன்னன் சங்கிலியனின் 405 ஆவது சிரார்த்ததினம் இன்றாகும். அதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.**

■ என்.பி.ஸ்ரீந்திரன்
*செயலாளர்,*
*இலங்கை சிவசேனை.*

தொன்மையும் சிறப்பும்மிக்க தமிழ் மன்னர் பரம்பரையில் வந்து உதித்த வீர மறவனே சங்கிலி மன்னன் ஏழாம் செகராஜசேகரன் என்ற சிறப்பு பெயரை உடையவன். ஆறாம் செகராஜசேகரன் மங்காத்தாள் இருவருக்கும் மகனாகப் பிறந்த சங்கிலி மன்னன் கி.பி.1519 ஆண்டு முதல் கி.பி. 1561ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாண இராஜ்ஜியத்தை ஆண்டவன். சிறந்த சைவத் தமிழ் மன்னனாகத் திகழ்ந்த சங்கிலி மன்னன் நெற்றியில் நீறும் நிமிர்ந்த உரம்மிக்க நெஞ்சம் கையில் வீர வாளும் கண்களில் ஒளியும் கொண்ட கம்பீரத் தோற்றத்தை உடையவன்.

வலிமைமிகு காலாட் படையையும் கடற்படையையும் கொண்டிருந்த சங்கிலி மன்னன், போர்த்துக்கேயரின் வணிக முயற்சிகள் நாட்டு நலனுக்கு பாதகமானது என்பதை அறிந்து, 1540 ஆம் ஆண்டுகளில் போர்த்துக்கேய வணிக கப்பல்கள் யாழ்ப்பாணத் துறைமுகத்துக்கு வந்தபோது படைகளை அனுப்பி கப்பல்களையும் பொருள்களையும் பறிமுதல் செய்து பறங்கிகளுக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தான்.

போர்த்துக்கேயர் பறங்கியர்களின் வணிகத்துக்கும் மதமாற்ற நடவடிக்கைகளுக்கும் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த சங்கிலி மன்னன், பிரான்சிஸ் சவேரியர் பாதிரியாரும் குரோஸ் பாதிரியாரும் மேற்கொண்டிருந்த மதமாற்ற நடவடிக்கைகளுக்குப் படை கொண்டு பதிலடி கொடுத்தவன். சங்கிலி மன்னனுக்கு பாதிரிமார் இருவரும் கடும் பகையாளிகளாக இருந்தனர். யாழ்ப்பாண வரலாற்றை குறித்து வைத்த பாதிரிமார் சங்கிலியனின் வீரப்பிரதாபங்களை மறைத்ததுடன், வரலாற்றை திரிபுபடுத்தியும் எழுதியுள்ளனர்.

கி.பி.1544ஆம் ஆண்டில் பாதிரிமார் இருவரதும் தூண்டுதலின் பேரில் மன்னாரில் வாழ்ந்த சைவ மக்கள் பலர் கத்தோலிக்கர்களாக மதமாற்றப்பட்டிருந்தனர். இதை அறிந்த சங்கிலி மன்னன் படை அனுப்பி மதம் மாறிய யாவரையும் தண்டித்தான். இது முதல் யாழ்ப்பாணத்தரசு போர்த்துக்கேயப் படைகளுக்கு எதிராக எழுச்சி பெற்றிருந்தது. இந்த எழுச்சிக்குத் துணையாக சிங்கள மன்னன் மாயாதுன்ன, சங்கிலி மன்னன் உடன் கைகோர்த்து நின்றான். போர்த்துக்கேயரை யாழ்ப்பாணத்தில் நிலை கொள்ளவிடாது தடுப்பதில் சங்கிலி மன்னன் கடும் முயற்சி செய்திருந்தான். 1545 ஆம் ஆண்டு சீதாவாக்கை கண்டி இராஜ்ஜியங்களுடன் தொடர்பைப் பேணி இருந்தான். போர்த்துக்கீசருக்கு எதிராக படை அனுப்பி உதவிகள் புரிந்தான். தமிழ் மன்னன் சங்கிலியன் ஒரு மாவீரன் என்பதை நல்லூர் வீரமாகாளியம்மன் ஆலயத்தின் வயல்வெளியில் போர்த்துக்கேயர் படைகளுடன் நடந்த 10 நாள் வாள் சண்டை கட்டியம் கூறுவதாக உள்ளது. இந்தப் போரில் ஆயிரத்து 700க்கும் மேற்பட்ட பறங்கியப் படைகளின் தலைகள் சங்கிலியனின் வாளுக்கு இரையாகி இருந்தன. இதைக் கண்ட பறங்கியப் படைகள் கதிகலங்கி பின்வாங்கி நின்றன. உயிரைக் காக்க ஒரேவழி சரண் புகுவதே என எண்ணி நின்றன. பதினோராம் நாள் சங்கிலி மன்னன் நானூறு பேரைக்கொண்ட படைவீரர்களுடன் மேலும் முன்னோக்கிச் சென்றிருந்தான். அவ்வேளை தரங்கமா பாடியிலிருந்து துணைப் படைகள் பறங்கியப் படைகளுக்கு உதவிக்குவர அவர்கள் உற்சாகமடைந்து போராடத் தயாரானார்கள்.

அப்போது நயவஞ்சகம்மிக்க காக்கை வன்னியன் சங்கிலிமன்னன் உடன் நட்புப்பூண்டு காட்டிக் கொடுத்து பறங்கியர்களிடம் வெகுமதிகளைப் பெற்றிருந்தான். சங்கிலிமன்னன் சிறைபிடிக்கப்பட்டான். கோவா கொண்டு செல்லப்பட்டு, தூக்கில் இடப்பட்டான். மறைந்தான் மாவீரன். வீழ்ந்தது யாழ்ப்பாண இராஜ்ஜியம்.

வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு நிகராகச் செயற்பட்டு தமிழையும் சைவத்தையும் கட்டிக்காத்த சங்கிலி மன்னன் புகழ்பாடுவோம். பரணிபாடுவோம். அவனது வரலாற்றை எமது அடுத்த சந்ததிக்கு எடுத்துச்செல்வோம். சங்கிலிமன்னன் இறந்ததாகக் கருதப்படும் வைகாசி திங்களில் வரும் அட்டமி பூரட்டாதி திதியில் சிரார்த்த கிரியையை நாட்டின் பல பாகங்களிலும் அனுஷ்டிப்போம். ஆண்ட பரம்பரை மீண்டும் ஆளவேண்டும். அடுத்த சந்ததியினரை அதற்கு நாம் தயார்படுத்துவோம். அனைவரும் இணைவோம். அருந்தமிழ் வீரம் காப்போம். ■

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சங்கடங்கள் ஏற்படும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஆதரவு கிடைக்கும். எதிர்பார்த்ததை விட இலாபம் கூடுதலாகக் கிடைக்கும். திடீர் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். பணவரவு கிடைக்கும். நிம்மதி பெறுவீர்கள். திடீர் ஆதாயம் கிடைக்கக்கூடும். பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளது. விநாயகரை வழிபடுவது நன்மைகளை அதிகரிக்கும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் தேவை. வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் கிடைக்கும்.

**கடகம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். பணிகளில் கூடுதல் கவனம் தேவை. வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். உறவுகளால் செலவுகள் ஏற்படும். சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். ஆதாயம் பெறும் வாய்ப்பு உண்டு.

**கன்னி:** உறவுகளிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரம் வழக்கம் போலவே இருக்கும். சிவபெருமானை வழிபட நற்பலன்கள் அதிகரிக்கும்.

**துலாம்:** இன்று பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். சங்கடங்கள் ஏற்படக்கூடும். உங்கள் பொறுப்புகளைப் பகிர்ந்துகொள்வது ஆறுதலாக இருக்கும். வியாபாரம் எதிர்பார்த்தபடியே நடக்கும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். உறவுகளால் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. முடிவுகள் எடுப்பதில் குடும்பப் பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு எடுக்கவும்.

**மகரம்:** அனுகூலமான நாள். இளைய சகோதர வகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையாக இருப்பது அவசியம். உடல்நலனில் கவனம் தேவை.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். உறவினர்கள் தொடர்பு கொண்டு பேசுவது மகிழ்ச்சியும் உற்சாகமும் தருவதாக இருக்கும். வியாபாரத்தில் பணியாளர்களின் ஒத்துழைப்பால் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும்.

**மீனம்:** புதிய முயற்சிளைத் தொடங்குவது நல்லது. கடன் வாங்க நேரிடும். சங்கடங்கள் ஏற்படும். பணியாளர்களால் தேவையற்ற செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. விநாயகரை வழிபட சங்கடங்கள் நீங்கி மகிழ்ச்சி பெருகும்.

# அனுமதியின்றி மீன் விற்ற வியாபாரிக்குத் தண்டம்



யாழ்ப்பாணம், மே 31

வலிகாமம் தெற்குப் பிரதேச, ஏழாலை உப அலுவலகத்தின் ஆளுகைக்குட்பட்ட ஏழாலை தெற்கு மயிலங்காடுப் பொதுச் சந்தைக்கு அண்மித்த பகுதிகளில் பிரதேசசபையின் அனுமதியின்றி மீன் விற்பனையில் ஈடுபட்டவர்களுக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை தண்டம் விதிக்கப்பட்டது.

ஏழாலை உப அலுவலகப் பொறுப்பதிகாரி மற்றும் வருமானப் பரிசோதகர் தலைமையிலான குழுவினர் அனுமதியின்றி மீன் விற்ற வியாபாரிகளிடம் தண்டம் அறவிட்டதுடன், அறிவுறுத்தல்களையும் வழங்கினர். (எ-25-66)

# மணவாளக்கோல உற்சவம்

யாழ்ப்பாணம், மே 31

புத்தூர் கிழக்கு தல்லுடை ஸ்ரீ கன்னியர் வைரவர் ஆலயம் அலங்கார உற்சவத்தின் பூர்த்தி நாளான கும்பாபிஷேக தின மணவாளக் கோல உற்சவம் நாளை சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதைத் தொடர்ந்து 108 சங்காபிஷேகமும் நடைபெறும். மாலை 6 மணிக்கு திருவூஞ்சலைத் தொடர்ந்து வைரவப் பெருமான் வெளிவீதி உலா வரும் திருக்காட்சியும் இடம்பெறுவுள்ளதாக ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (எ-25-66)

# வைகாசிப் பொங்கல்

யாழ்ப்பாணம், மே 31

கொழும்புத்துறை வில்லையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் இன்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெறவுள்ளது. அத்துடன் அன்றைய தினம் தீமிதிப்பும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆழம் பார்க்கும் வேழம்

தேர்தல் காய்ச்சல் இலங்கைத்தீவில் பரவத் தொடங்கியிருக்கும் சமயத்தில், இன்னும் இரண்டு வருடங்களுக்கு ஜனாதிபதித் தேர்தலையோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலையோ நடத்தாமல் இருப்பதற்கான காய்நகர்த்தல்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இறங்கியிருக்கிறார். அதன் வெளிப்பாடே, 'இரண்டு தேர்தல்களையும் இரண்டு வருடங்களுக்கு பிற்போட எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரேரணையைக் கொண்டுவரவேண்டும்' என்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டாரவின் கோரிக்கை. ரணில் வேறு, பாலித ரங்கே பண்டார வேறல்ல. ரணில் என்ன நினைக்கிறாரோ, எதைச் சொல்ல விரும்புகிறாரோ அதைக் கட்சியின் குரலாக வெளிப்படுத்துவதுதான் பாலித ரங்கே பண்டாரவின் பணி. எனவே தேர்தல்களை இருவருடங்களுக்கு ஒத்திப்போடுதல் என்ற ஐ. தே.க.வின் கோரிக்கையை ரணிலின் கோரிக்கையாகவே அர்த்தப்படுத்த வேண்டும்.

ஆனால் இங்குதான் ரணில், தானொரு கைதேர்ந்த அரசியல்வாதி என்பதை வெளிப்படுத்துகின்றார். 'அரசமைப் பின்படி , தேர்தல்கள் ஆணைக்குழு குறித்தொதுக்கும் திகதியில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்' என்றுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தன்னைச் சந்திக்கும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் முதல் உள்ளூர் ஊடகவியலாளர்கள் வரை அனைவருக்கும் கற்பூரம் ஏற்றி சத்தியம் செய்யாத குறையாகச் சொல்லி வருகின்றார். மறுபுறத்தில், தன் கட்சிக்காரர்களையும், விசுவாசிகளையும் வைத்து 'இரு வருடங்களுக்கு ரணிலிடம் ஆட்சி இருந்தாலேயே பொருளாதார நெருக்கடிக்கு நிரந்தரத் தீர்வை அடையலாம்' என்ற காரணத்தை முன்வைத்து, தேர்தல்களைப் பிற்போடும் வேலையை முடுக்கிவிட்டுள்ளார். ஒருவேளை, ரணில் ஆசைப்படுவது போல தேர்தல்களைப் பிற்போடும் நடவடிக்கைகள் ஐக்கியதேசியக் கட்சியால் பகிரங்கமாக முன்னெடுக்கப்பட்டாலும் கூட, ஜனநாயகத்தை படுகொலை செய்கிறார் என்ற பழி ரணில் மீது விழாது. ஏனெனில்' என்னுடைய கட்சிதான் இவ்வாறு தேர்தலைப் பிற்போட முனைகின்றதே தவிர, நான் தேர்தல்களை நடத்த வேண்டுமென்பதில் தான் உறுதியாக இருக்கின்றேன்' என்று ரணில் இந்த விடயத்தில் இருந்து தப்பிச் சென்றுவிட முடியும். எப்படி உள்ளூராட்சித் தேர்தலைநடத்தவிடாமல் காரியங்களைச் செய்துவிட்டு, 'திறைசேரியில் பணம் இல்லாவிட்டால் நானென்ன செய்ய முடியும்?' என்று கதையை மாற்றினாரோ, அதே வேலையைத்தான் ஜனாதிபதித் தேர்தலிலும்,நாடாளுமன்றத் தேர்தலிலும் ரணில் காட்ட நினைக்கின்றார்.

தேர்தலை ஒத்திவைப்பதனால் குறித்த இரு வருடங்களும், ஜனாதிபதிக் கதிரையில் மேலதிகமாக அமரமுடியும் என்பதையும் தாண்டிய பல அரசியல் ஆதாயங்களை அடைவதற்கே ரணில் விக்கிரமசிங்க அடிகோலுகின்றார். மறதி மக்களின் தேசிய வியாதி. 'அரகலய' போராட்டத்தையும், பொருளாதாரப் படுகொலையாளிகளையும் இப்போதே மெல்ல மெல்ல மறக்கத் தொடங்கிவிட்டனர். இந்த நிலையில் இன்னும் இரண்டு வருடங்கள் போனால், நாட்டில் பொருளாதாரம் உண்மையாகவே ஸ்திரத்தன்மையை எய்தினால், கடந்தகால கசப்புகளை அவர்கள் மறந்துவிட்டு, அந்தத் தருணத்தில் யார் அதிக சலுகைகளைத் தருவதாக வாக்குறுதி கொடுக்கின்றார்களோ அவர்களுக்கே வாக்களிக்கக்கூடும். அத்தோடு பொருளாதார நெருக்கடியால், ஊசலாடிக்கொண்டிருந்த நாட்டை இன்னும் இரு வருடங்களில் மீண்டும் நிமிரச் செய்தால் அதற்கான முழு உரித்தும் ரணிலைச் சென்றடையும். எனவே தளம்பல் நிலையில் இருந்து தேர்தலை நடத்துவதை விடவும், ஒரு நிலையான பொருளாதாரக் கட்டமைப்பை உருவாக்கிவிட்டு தேர்தலை நடத்தினால், ரணில் கை ஓங்குவதற்கான வாய்ப்பு அதிகம். எனவேதான் ஜனாதிபதிப் பதவியை மக்களின் ஆணையோடு பெறுவதோடு, தனது ஐக்கிய தேசியக் கட்சியையும் ஆட்சிக்கட்டிலுக்கு கொண்டுவர இந்த இரு வருட அவகாசம் ரணிலுக்கு உதவலாம். அதற்காகவே இப்போது , தன்னுடைய கட்சிச் செயலாளரான பாலித ரங்கே பண்டாரவை வைத்து ஆழம் பார்க்கும் வேலைகளில் ரணில் என்ற வேழம் (யானை) இறங்கியிருக்கிறது. பாலித ரங்கே பண்டாரவின் கூற்றுக்கு கிடைக்கும் எதிர்வினைகளை அடிப்படையாகக் கொண்டே, தேர்தலை ஒத்திப்போடுவதற்கான அடுத்த கட்ட நகர்வை ரணில் தீர்மானிக்கக் கூடும். ஆனால் ரணிலின் நகர்வுகளுக்கான விளைவை தீர்மானிப்பது காலமும், மக்களும்.




# சிகரெட்டுக்கு அடிமையாகும் பதின்ம வயது மாணவர்கள்!



## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

**கொழும்பு, மே 31**

**13 முதல் 15 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் புகைப்பிடிக்கும் பழக்கத்துக்கு அடிமையாகி வருகின்றனர் என சிறுவர் மருத்துவ நிபுணர் மருத்துவர் சன்ன டி சில்வா தெரிவித்துள்ளார்.**

உலக புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற ஊடகசந்திப்பில் அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

பதின்ம வயதினரிடையே புகைப்பிடிக்கும் பழக்கம் அதிகரித்துள்ளமை கணக்கெடுப்பில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கெடுப்பில் 9, 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளில் படிக்கும் மாணவர்களில் 5.7 வீதம் பேர் ஒரு முறையாவது புகைப்பிடித்துள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அவர்களில் 3.7 வீதம் பேர் புகைப்பிடிக்கும் பழக்கத்துக்கு அடிமையானவர்கள் என கண்டறியப்பட்டுள்ளது.

பெற்றோர் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். புகைப்பிடிக்கும் பழக்கத்தால் குழந்தைகளுக்கு சுவாச நோய்கள் மற்றும் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புள்ளது - என்றும் அவர் மேலும் அறிவுறுத்தியுள்ளார். (ச-இ)

# மண் சரிவு அபாய வலயத்தில் 300க்கும் அதிக பாடசாலைகள்

கொழும்பு, மே 31

மண் சரிவு அபாயப் பகுதியில் 300க்கும் மேற்பட்ட பாடசாலைகள் உள்ளன என்று தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

அடையாளம் காணப்பட்டுள்ள பாடசாலைகள் அமைந்துள்ள பகுதியில் இடர்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (எ-இ)

# தாய்லாந்துக்குச் செல்ல விசா தேவையில்லை!

இலங்கைப் பயணிகள் தாய்லாந்துக்குள் நுழைவதற்கு விசா தேவையில்லை என்று தாய்லாந்தின் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இலங்கையில் இருந்து செல்லும் பார்வையாளர்கள் உட்பட அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நோக்கில் இந்தப் புதிய விசா ஊக்குவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

விசா இல்லாமல் 60 நாள்கள் தாய்லாந்தில் தங்கி இருக்கலாம் என்றும் அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (ச-இ)

# விவசாயிகள் கணக்கில் நெற்செய்கை மானியம்

கொழும்பு, மே 31

2024 ஆம் ஆண்டுக்கான நெற்செய்கைக்கான பயிர்ச்செய்கை மானியமாக 2.5 பில்லியன் ரூபா விவசாயிகளின் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது என கமநல அபிவிருத்தித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, 2 இலட்சத்து 13ஆயிரத்து 771 விவசாயிகளுக்கு 2.5 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை விவசாயிகளின் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது. (ச-இ)

# தனியார் பல்கலைக்கழக கற்கைக்கு கடன் சலுகை

கொழும்பு, மே 31

தனியார் பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பு மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடன் வழங்குவதற்கான வரம்பு 10 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது தனியார் பல்கலைக்கழகங்களில் பதிவு செய்துள்ள மாணவர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் பணியை உயர்கல்வி அமைச்சு நிறைவு செய்துள்ளது. அந்தத் தகவலின் அடிப்படையில் இம்முறை கடன் வழங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும். இந்தக் கடன் திட்டத்தில் இதுவரை ஏழு குழுக்களின் மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## நாளை

01.06.2024

**சனிக்கிழமை**

**வைகாசி - 19**

சுபநேரம் : 02.52 - 04.22

ராகுகாலம் : 08.52 - 10.22

## நாளொரு நல்வார்த்தை

**அறிவுக்கு ஏற்றது மக்களுக்கு நன்மை பயப்பது, மக்களின் அறிவை வளர்ச்சியடையச் செய்வது எதுவோ அதைப் பற்றியே பேசு.**

**- தந்தை பெரியார் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிபந்தனைகளின் அடிப்படையில் பொதுவேட்பாளருக்கு ஆதரவு

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை

**யாழ்ப்பாணம், மே 31**

**சிறிலங்காவின் அரச தலைவரைத் தேர்வு செய்யும் தேர்தல் தொடர்பான பேச்சுகள் முனைப்புப் பெற்றுள்ள நிலையில், கட்டமைக்கப்பட்ட இனவழிப்புப் பொறிமுறைகளுக்குள் (Structural Genocide) சிக்குண்டு இனவிடுதலை வேண்டி நிற்கும் ஈழத்தமிழ் மக்கள், தமது அரசியல் விடுதலைப் பயணத்தில் இந்தத் தேர்தல் களத்தை தங்கள் நலன்சார்ந்து எவ்வாறானதாகக் கையாள வேண்டும் என்பதில் கடந்த கால அனுபவங்களைப் பரிசீலனை செய்து இனியாவது சுதாகரித்து முன்நகர வேண்டிய அவசியநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.**

-இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அந்த ஒன்றியம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2009ஆம் ஆண்டுக்குப் பின்னரான 15 ஆண்டுகள் காலத்தில் சாணக்கியம், ராஜதந்திரம் என்னும் பெயரில் வெற்று வாக்குறுதிகளை மாத்திரமே நம்பி தமிழ்த் தரப்புகளால் முன்னெடுக்கப்படும் பேரம்பேசும் இணக்க அரசியலால் தமிழினவழிப்பிலிருந்து தாயகத்தின் ஓர் அங்குல நிலத்தையேனும் காப்பாற்ற முடியவில்லை என்பதோடு, தமிழ் மக்களும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் உதிரிகளாக்கப்பட்டுள்ளமையும் அது உளவியல்ரீதியில் தோல்வி மற்றும் அடிமைத்துவ மன நிலையை மக்களிடையே விதைப்பதிலுமே வெற்றியடைந்துள்ளது.

1. ஈழத்தமிழ் மக்களை அரசியற்படுத்தி அணிதிரட்டுதல்.
2. போருக்குப் பின் மக்களிடையே உள்ள தோல்வி மனோநிலையினை அகற்றுதல்.
3. வடக்கு - கிழக்குக்கான பொருளாதாரக் கட்டமைப்பை நிறுவுதல்.
4. அரசற்ற தரப்பாக பன்னாடுகளைக் கையாள்வதற்கான வெளிவிவகாரக் கொள்கை மற்றும் கட்டமைப்பை உருவாக்குதல்.
5. பன்னாட்டுச் சமூகத்தில் கூட்டாகத் தமிழரின் குரலை முன்வைத்தல்.
6. வடக்கு - கிழக்கில் முன்னெடுக்கப்படும் தொடர்ச்சியான கட்டமைக்கப்பட்ட இனவழிப்பைத் தடுத்துநிறுத்துதல்.
7. அதிகாரப்பகிர்வோடு எவ்விதத்திலும் தொடர்பற்ற சிறிலங்கா ஒற்றையாட்சி அரசமைப்புக்குட்பட்ட 13ஆம் திருத்தத்துக்கு அப்பால் தமிழ் அரசியலை நகர்த்துதல்.

ஓர் அரசற்ற தரப்பாக எமது தமிழ்ச் சமூகத்தால் அடைந்து கொள்ளப்பட்டிருக்க வேண்டிய மேற்குறிப்பிட்ட விடயங்களெதனையும் சாதித்திராத தமிழ் அரசியற் தரப்புகள் தொடர்ந்தும் பேரம் பேசும் அரசியலால் இனியும் எதையாவது சாதிக்கும் என்பதில் நம்பிக்கையில்லை. தமிழ் அரசியல் கட்சிகளும், குடிமக்கள் சமூகத்தினரும் (Civil Societies) தமிழ் மக்களின் பின்நோக்கிய இந்நிலையிலாவது தம்மைச் சுதாகரித்துக் கொண்டு தமிழ் அரசியலின் பாதையை மீளச் சரிவர தகவமைத்துக் கொள்ளவேண்டும்.

2010, 2015, 2019 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தல்களில் இனப்படுகொலைப் பொறுப்பாளிகளான ஒரு தரப்பினரை எதிர்ப்பதாகக் கூறி, இனப்படுகொலைக் குற்றத்தைப் புரிந்த சிறிலங்காவின் இராணுவத் தளபதி, பதில் பாதுகாப்பு அமைச்சர், போர்க்குற்றம் புரிந்த பெருமளவான இராணுவத்தினரின் ஆதரவைப் பெற்ற நபர்களுக்கே வாக்களிப்பதற்குப் பரிகார நீதி கோரக்கூடிய தமிழ் மக்கள் தவறாக வழிநடத்தப்பட்டோம்.

இனியாவது ஏமாற்று கபட அரசியலுக்குப் பலியாகாமல், தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுக்கோ, வெளித்தரப்புகளுக்கோ சென்று சேர்வதைத் தவிர்த்து, தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் தீர்மானங்களை தமிழ் அரசியல் தரப்புகள் மேற்கொள்ளத் தவறுமேயானால் நாம் அரசியல் பிழைத்த மக்களாக்கப்படுவோம்.

சமகால அரசியற் களச்சூழலில் தமிழ் மக்களின் முன்னால் உள்ள தெரிவுகள்,

1. சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணித்தல்.
2. சிறிலங்காவின் அரச தலைவரைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் தற்போது எதிர்பார்க்கப்படும் தேர்தலை நிராகரித்து, அந்தத் தேர்தலை நடைமுறையில் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்கான அறைகூவல் விடுக்கும் பொதுவாக்கெடுப்பாகக் கையாளும் வகையில் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துதல்.

சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணித்தல் மற்றும் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துதல் இரண்டும் ஒரே கருத்தியலின் இருவேறுபட்ட பிரயோக வடிவங்களே. தமிழர்களால் அளிக்கப்படாத வாக்குகள் மற்றும் பொதுவேட்பாளருக்கு வழங்கப்படும் வாக்குகள் என இரண்டுமே சிங்கள - பௌத்த பெருந்தேசியவாதத்தின் முகவர்களை நிராகரிக்கும் வாக்குகளேயாகும்.

பொதுவேட்பாளர் தொடர்பில் தீர்க்கமான முடிவுகள் மேற்கொள்ளப்படும் பட்சத்தில், பின்வரும் விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்த தமிழ் மக்கள் உள்ளிட்ட தொடர்புபட்ட தரப்புகள் அனைவரையும் வலியுறுத்துகின்றோம்.

1. சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைப் புறக்கணிப்பதனாலோ, தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்துவதனாலோ சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர் எவர் வென்றுவிடக்கூடும் எனும் கேள்வி பொதுவில் அனைவரிடமும் எழக்கூடியதொன்று. ஆனால், அரசியல் விடுதலை வேண்டும் சமூகமாக எமக்கு எது தேவை? எமது நிலைப்பாடு என்ன? என்பதுவே நாம் அக்கறை கொள்ளவேண்டியது. அதன் பக்க விளைவுகளைப் பற்றியல்ல.
2. பொதுவேட்பாளரை நிறுத்துதல் என்பது எதிர்வரும் சிறிலங்காவின் அரச தலைவர் தேர்தலைத் தமிழ் மக்களின் வேணவாக்களைப் பிரதிபலிக்கும் தேர்தல் ஒன்றாக மாற்றுவதேயாகும். ஆகவே, பொதுவேட்பாளர் எனும் எண்ணக்கரு நடைமுறையில் வெற்றி - தோல்விகளுக்கு அப்பாற்பட்டதாகும்.
3. பொதுவேட்பாளர் தமிழ் மக்களின் இதுவரைகால வேணவாக்களை பிரதிபலிக்க வேண்டுமேயன்றி, குறிப்பிட்ட சில தரப்புகளின் அரசியல் நலன்களையல்ல.
4. பொதுவேட்பாளர் தமிழ் மக்களின் குறியீடாக நிறுத்தப்படவேண்டும். முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தை அடையாளப்படுத்தும் வகையில் கிழக்கிலிருந்து வேட்பாளர் தேர்வு நடைபெற வேண்டும். அவ்வேட்பாளர் பெண்ணொருவாராக இருப்பின் உத்தமம்.
5. தமிழ்மக்களின் வாக்குகள் என்பது அவர்தம் வேணவாக்களை உறுதிபடச் சொல்வதற்கேயன்றி பேரங்கள் பேசுவதற்கல்ல. ஆகவே இரண்டாம், மூன்றாம் விருப்பு வாக்குகள் என்ற பேச்சுகளுக்கே இடமளித்தல் கூடாது.
6. பொதுவேட்பாளராக நிறுத்தப்படும் நபர் அரசியல்வாதியல்லாதவராக இருப்பதோடு, தேர்தலின் பின்னர் அந்நபர் எந்தவொரு அரசியல் கட்சியுடனும் இணைந்து செயற்படுவதோ, தேர்தல் அரசியலில் ஈடுபடுவதோ தவிர்க்கப்படவேண்டும் என்பது முன்நிபந்தனையாக்கப்படவேண்டும்.

இந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்மக்களின் வாக்குகள் இந்தத் தேர்தலிலாவது அவர்களின் உரிமைக்குரலாகப் பிரயோகிக்கப்படவேண்டும். மேற்கண்ட தெரிவுகளில் தமிழ் அரசியல் கட்சிகள் மற்றும் குடிமக்கள் சமூகத்தினர் உள்ளிட்ட அனைவரும் இணைந்து கூட்டாகத் தீர்மானமொன்றை மேற்கொள்ளும் பட்சத்தில், தமிழ்ப் பொதுவேட்பாளரை ஆதரிப்பதற்கும் இணைந்து பயணிப்பதற்குமான எமது உடன்பாட்டை மாணவர் சமூகமாக நாம் வெளிப்படுத்துகின்றோம்.

தமிழ் மக்களின் வாக்குகள் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் முகவர்களுடனான பேரம் பேசலுக்காகப் பலியாக்கப்படாது. தமிழ்மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு, தமிழ் அரசியற்கட்சிகள் மற்றும் குடிமக்கள் சமூகத்தினர் ஒன்றுபட்டுத் தீர்க்கமான முடிவொன்றைத் திடசித்தத்துடன் மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் சமூகம் வலியுறுத்தி நிற்கின்றோம் - என்றுள்ளது. (எ-26,66,125)

## மழலைகள் கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 31

புன்னாலைக்கட்டுவன் வடக்கு ஸ்ரீ துர்க்கா முன்பள்ளி நடத்தும் கண்காட்சி இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு முன்பள்ளி வளாகத்தில் நடைபெறவுள்ளது. இ.கெங்காதரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் புன்னாலைக்கட்டுவன் இலங்கை வங்கி முகாமையாளர் ச.கிருஷ்ணா பிரதம விருந்தினராகப் பங்கேற்கவுள்ளார். (ச)

## மரக்கறி விலை எகிறும்

கொழும்பு, மே 31

நிலவிய கடும் மழை மற்றும் காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக எதிர்காலத்தில் மரக்கறிகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படுவதுடன் அவற்றின் விலையும் துரிதமாக உயரும் என நுவரெலியா பொருளாதார நிலையம் எச்சரித்துள்ளது. பயிரிடப்பட்ட விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கி மரக்கறிப் பயிர்கள் அழிவடைந்துள்ளன. இதனால் தேவைக்கு ஏற்ப விநியோகம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சுமார் ஒரு மாத காலப் பகுதிக்குள் மரக்கறிகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வருடாந்த திருவிழா

யாழ்ப்பாணம், மே 31

குருநகர் புனித அன்னை வேளாங்கன்னி ஆலய வருடாந்தத் திருவிழா கொடியேற்றத்துடன் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில் நாளை சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை பெருவிழாத் திருப்பலியும், நாளை சனிக்கிழமை திருவிழாத் திருப்பலியும் இடம்பெறும். (எ-25)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் சங்கிலியனின் 405ஆவது நினைவுதினம்

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாண இராஜ்ஜியத்தின் கடைசித் தமிழ் மன்னன் இரண்டாம் சங்கிலியனின் 405ஆவது நினைவுதின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளது.

சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவர் ஸ்ரீசாய்முரளி பிரதம விருந்தினராகவும், தொலைக்காட்சி ஊடகவியலாளர் ஏ.ஸ்ரீநிவாசராமன் தென்னிந்திய அதிதியாகவும், யாழ்.மாநகரசபையின் ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை வருகைதரு விரிவுரையாளர் பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீட ஓய்வுநிலைப் பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-66)

## செயல்விளக்கம்

யாழ்., மே 31

யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யோகா தொடர்பான செயல்விளக்க நிகழ்வு துறைசார் சிறப்பு அதிதிகளின் பங்கேற்புடன் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் நெடுந்தீவுப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-66)


## பெயர் மாற்றம்

மணல் தெரு உடுப்பிட்டி வடக்கில் வசிக்கும் **சி. சிவநேசானந்தா** ஆகிய நான் இன்று முதல் எனது பெயரினை **சி.ஜீவநேசானந்தம்** என மாற்றிக் கொள்வதோடு இன்று முதல் சகல ஆவணங்களி லும் அவ்வாறே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

(cs. 28129) (N-1) **சி. ஜீவநேசானந்தம்**

## சட்டக் கல்லூரி
### இறுதியாண்டுப் பரீட்சை
### 2024 OCTOBER

உயர் புள்ளியைப் பெற, பரீட்சை வினாத்தாளை வெற்றிகரமாக கையாள

Trust Account & Ethics
Evidence, Conveyancing

**T.P. 077 321 2740**

(CS/55215) J-1


## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி எமறின் சுதர்சினி றெஜினோல்ட் கிளமென்ட் அவர்களின் மாமியார்

**லூ ஜேட்றூட் அம்மா**

அவர்கள் 06.05.2024 அன்று காலமானார்.
அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

(Nc /5521- N-1)

## கேள்வி அறிவித்தல்

தென்மராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமானது எரிபொருள் நிலைய முன்புற நிலம் புனரமைப்புக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகளைக் கோருகின்றது என்ற விளம்பரம் 06.05.2024 இல் பிரசுரிக்கப்பட்டது. விண்ணப்பிக்கும் இறுதித் திகதி 14.06.2024 திகதி காலை 10.00 மணிவரை கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

(cr42533 ) (N.1) **தலைவர்.**

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரியின் ஆசிரியை திருமதி பொன்னம்பெருமாள் கிருசாந்தி அவர்களின் மாமியார்

**தவமணிதேவி பாலசுந்தரம்**

அவர்கள் 17.05.2024 அன்று காலமானார்
அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் வட்டம்
**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**

(Nc /5522- N-1)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
01 . 03 . 1951



விண்ணில்
11 . 06 . 2023

ஆனி மாதம் 11 ஆம் நாள் (11.06.2023) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி

### திருமதி யோகம் யோகநாதன் (கிளி ரீச்சர்)

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தின நினைவுகள் இன்று (31.05.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

V.T.S Lane
Urumpirai South
Urumpirai

(CS 55224) V-1

குடும்பத்தினர்
077 [illegible]

## வட இலங்கைச் சங்கீத சபை
மருதனார்மடம் - சுன்னாகம்

### அறிமுறைப் பரீட்சை திகதி மாற்றம்

வட இலங்கைச் சங்கீத சபையினால் இவ் வருடத்திற்கான அறிமுறைப் பரீட்சைகள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் உரிய நேரசூசிக்கு அமைவாக குறித்த நேரத்திற்கு கீழ் குறிப்பிடப்படும் திகதிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தங்கள் பரீட்சை நிலையங்களுக்கு சென்று பரீட்சைக்கு தோற்ற முடியும்.

**08.06.2024 பரீட்சைகள் யாவும் 22.06.2024 திகதியும்**
**09.06.2024 பரீட்சைகள் யாவும் 23.06.2024 திகதியும்,**
**அகில இலங்கை ரீதியாக நடைபெறும்**

பொ.ரவிச்சந்திரன்
தலைவர், வட இலங்கைச் சங்கீத சபை,
மருதனார்மடம் - சுன்னாகம்.

(CR/42532)N-1


## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான **LRDC** பாதுகாப்பு நிறுவனத்திற்கு வடமாகாணத்தில் 05 மாவட்டங்களுக்கும் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கான வெற்றிடங்கள் உள்ளன.

*** ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.**
*** வயது எல்லை 18-50 வரை.**
*** நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.**
*** கல்வித் தகைமை - க.பொ.த. சாதாரண தரம்.**



**சேவை நிலையங்கள்**


1. யாழ். போதனா வைத்தியசாலை.
2. நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை. வவுனியா. மன்னார். முல்லைத்தீவு. யாழ்ப்பாணம்.
3. இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம்.

தொடர்பு:-
OIC ஆனந் 071 961 5700
OIC அருண்குமார் 071 961 5772
OIC கல்யாண சுந்தரம் 070 127 0407
077 433 1841

(CS 55218 N -1)


## மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 05 . 1950



மறைவு
28 . 05 . 2024

### உருத்திரா இராமநாதன்
**(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)**

யாழ்ப்பாணம் மானிப்பாயை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி திருநகர் தெற்கு இல 1030 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட உருத்திரா இராமநாதன் அவர்கள் செவ்வாய்க்கிழமை (28.05.2024) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் இராமநாதன் (பொலிஸ்உத்தியோகத்தர்)-பரமேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மகனும் மகிலவேணியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி இராமநாதன் (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)-நாகேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் பிரதீபனின் அன்புத்தந்தையும், அனாமிகாவின் பாசமிகு மாமனாரும் நேகா, ரியானாவின் அன்புப் பேரனும் மங்களேஸ்வரி, ஜெகதீஸ்வரி, காலஞ்சென்ற வரதேஸ்வரி மற்றும் சிவேஸ்வரி, ஞானேஸ்வரி, ரவீந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கமலவேணியின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (31.05.2024) காலை 8.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
+94 76 999 3404 } மகன்
+[illegible] 646 4610 } மகன்

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CS 28271) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை பிற்போடும் அதிகாரத்தை அரசமைப்பிலிருந்து நீக்கவேண்டும்!

## சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

அமெரிக்கா போன்று இலங்கையிலும் உரிய காலத்தில் தேர்தலை நடத்தும் வகையில் அரசமைப்பு மாற்றப்பட வேண்டும்.

-இவ்வாறு புளொட் அமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். யாழ்ப்பாணத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எந்தத் தேர்தலாக இருந்தாலும் அது உரிய காலத்தில் நடத்தப்படவேண்டும். அரசாங்கம் தாங்கள் விரும்பியபடி தேர்தலைப் பிற்போடுவது ஜனநாயகத்தை மறுக்கும் செயற்பாடு ஆகும்.

அமெரிக்காவில் உள்ளதைப் போன்று தேர்தலைப் பிற்போடும் அதிகாரமற்ற அரசமைப்பு இங்கும் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் ஜனநாயகம் சிறக்கும்.

பொது வேட்பாளர் விடயத்தில் இன்றைய தேவை உணர்ந்து தமிழ்த் தரப்புகள் அனைத்தையும் இயன்றவரை இணைத்து ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளவேண்டும் என்று நாம் கூறுகின்றோம்.

பொதுவேட்பாளர் ஒருவரைக் கொண்டு வருவதன் ஊடாக தென்னிலங்கைக்கும், சர்வதேசத்துக்கும் எமது நிலைப்பாட்டை எடுத்துக்கூறமுடியும் என்று கருதுகின்றேன் - என்றார். (எ-125)

## மருத்துவப்பொருள்கள் வழங்கிவைப்பு



யாழ்ப்பாணம், மே 31

கதிர்காமப் பாதயாத்திரைக் குழுவினருக்குத் திருகோணமலை குச்சவெளிக் கிராமத்தில் அமைந்துள்ள தான்தோன்றி சித்தி விநாயகர் ஆலயத்தில் வைத்து, ஒருதொகுதி மருத்துவப் பொருள்கள், நான்காம் கட்டமாக கடந்த திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளன. (ப-66)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**


பருத்தித்துறை தம்பசிட்டியில் 1 1/4 பரப்புக் காணியில் நவீன முறையில் திருத்தியமைக்கப்பட்ட 4 அறைகளைக் கொண்ட வீடு வெட்டுக்கிணறுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **+ 4799 043150**

(CS 55204) N-1

## 14 ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 21 • 03 • 1937



மறைவு 06 • 06 • 2024

### அமரர் சந்திரசேகரம் நடேசபிள்ளை

**(ஓய்வுநிலை அதிபர் - யா/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்)**

பதின்நான்கு ஆண்டுகள் பறந்து
போனதே அப்பா...!
பாசங்கொண்ட மனங்கள்
பரிதவித்து ஏங்குதே
கடல், வானம் கூட நிறம்மாறினாலும்
மனம் கொண்ட பாசம்
தடம்மாறிவிடாதே...!

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!


**நுணாவில் மேற்கு,**
**சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

(CS 617) A-1

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 23 • 07 • 1945



ஆண்டவன் அடியில் 05 • 05 • 2024

கடந்த 05.05.2024 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### வேல்முருகேசு பத்மநாதன்

(முன்னாள் உரிமையாளர், லிபேட்டி மோட்டோர் ஹவுஸ் - நெல்லியடி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (01.06.2024) சனிக்கிழமை அதிகாலை 6.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் (03.06.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெறும், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

எமது குலவிளக்கு மறைந்த செய்திகேட்டு நாம் துயருற்றிருந்த வேளையில் சகல விதத்திலும் உதவிகள் புரிந்தவர்களுக்கும், நேரிலும் தொலைபேசி வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**கணையன் தோட்டம்,**
**புலோலி கிழக்கு, பருத்தித்துறை.**

**குடும்பத்தினர்**

(cl.42531) N-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 11 • 10 • 1949



இறப்பு 28 • 05 • 2024

### துரைராசா கந்தசுவாமி

வாகையடி வீதி மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வேலாயுதம் வீதி நுணாவில் மத்தியை வதிவிடமாகவும் கொண்ட துரைராசா கந்தசுவாமி அவர்கள் கடந்த 28.05.2024 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா - பாக்கியம் தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கைலாயபிள்ளை - மனோன்மணி தம்பதியரின் மருமகனும், நளாயினியின் அன்புக் கணவரும், மேனகா (லண்டன்), அகீபன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், லவேந்திரா (லண்டன்), அனிதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தேனுகா, வருண் ஆகியோரின் அன்புத் தாத்தாவும், பவளராணி, யோகராணி, தர்மரத்தினம், ஜெயராணி, அமிர்தராணி, பாக்கியதுரை, அற்புதராணி, மகாதேவா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் பாலசிங்கம், கமலாதேவி, அமிர்தலிங்கம், சிவகுமார், ஈஸ்வரி, ஜெகதீஸ்வரன், இந்துமதி, சரவணபவன், கமலேந்திரன், மணிவாசன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், வாசுகி, ஜெயரஞ்சினி, ஞானசுந்தரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2024) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**021 227 0506**

(CR/42528) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரங்கே பண்டார சொன்னது ரணிலின் உள்ளக்கிடக்கையே!

## டிரான் பெரேரா எம்.பி. குற்றச்சாட்டு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனையின் பிரகாரமே பாலித ரங்கே பண்டார தேர்தலைப் பிற்போடும் கருத்துகளை முன்வைத்திருக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் பெரேரா தெரிவித்தார்.

இது தொடர்பில் டிரான் பெரேரா மேலும் தெரிவித்ததாவது:-

"பாலித ரங்கே பண்டார ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர், எனவே, அவர் வெளியிடும் கருத்துக்கு மதிப்பு உள்ளது. அவர் வெளியிடும் அறிவிப்புகளை கட்சியின் நிலைப்பாடாகவே கருத வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. எனவே ரணில் தான் தன்னுடைய மனதில் உள்ளவற்றை, தனது கட்சியின் செயலாளர் ஊடாக மேற்படி கருத்தை வெளியிட்டு சமூகத்தின் நிலையை அறிய முயற்சி எடுத்திருக்கக் கூடும்" - என்றார்.

இதேவேளை - நாட்டில் உள்ள அரசமைப்பு தொடர்பில் ரங்கே பண்டாரவுக்கு புரிதல் இல்லை என்பதையே அவரின் அறிவிப்புகள் வெளிப்படுத்துகின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஹரினி அமரசூரிய தெரிவித்தார். (அ-ம-44)

## தேர்தல்கள் ஒத்திவைப்பு? எதிராகப் போராட்டம்!

கொழும்பு, மே 31

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் ரங்கே பண்டாரவுக்கு எதிராக நேற்றுப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் என்பவற்றை இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கவேண்டும் என்று ரங்கே பண்டார அண்மையில் தெரிவித்திருந்தார். அவருடைய இந்த அறிவிப்புக்கு எதிராகவே மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவுக்கு முன்பாக ஒன்று திரண்ட போராட்டக்காரர்கள், உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்பதை அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தினார்கள். தேர்தலைக் குழப்புவதற்கு சதிமுயற்சிகள் முன்னெடுக்கப்பட்டால் தீவிரமான போராட்டங்களை முன்னெடுப்போம் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (அ-ம-44)



## தேர்தல்கள் தொடர்பில் திங்களன்று அறிவிப்பாம்

கொழும்பு, மே 31

தேர்தல்கள் தொடர்பில் எதிர்வரும் திங்கட்கிழமை விசேட அறிவிப்பொன்றை விடுக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார நேற்றுத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் என்பவற்றை ஈராண்டுகளுக்கு ஒத்திவைக்கவேண்டும் என்ற ஐ.தே.க. செயலாளரின் யோசனைக்கு கடும் எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது சம்பந்தமாகவும், ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தை மேலும் ஈராண்டுகளுக்கு நீடிப்பது சம்பந்தமாகவும் நான் கருத்து வெளியிட்டிருந்தேன். இது தொடர்பில் பலரும் பல கோணங்களில் கருத்துகளை முன்வைத்துவருகின்றனர். சிறிகொத்தவுக்கு முன்னால் வந்து ஏழு பேர்கொண்ட குழுவொன்று போராட்டம் நடத்தியுள்ளது. அனைவரினதும் கேள்விகளுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை விசேட ஊடக சந்திப்பின் ஊடாக பதில்கள் வழங்கப்படும்' - என்றார். (அ-ம-44)

## கீரிச் சம்பா தட்டுப்பாடு

கொழும்பு, மே 31

மொத்த விற்பனைக் கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் கீரிச் சம்பாவுக்குத் தட்டுப்பாடு நிலவுவதாக மொத்த மற்றும் சில்லறை விற்பனை கடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கீரிச் சம்பா விற்பனைக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் இந்தத் தட்டுப்பாடு எழுந்துள்ளது. (ச-இ)

## மரண அறிவித்தல்



### கனகம்மா (கனகேஸ்வரி) நடராசா

(English Special Trained, தமிழ் பண்டிதை)

சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகேஸ்வரி நடராசா (ஓய்வுநிலை ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி) அவர்கள் கடந்த (29.05.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற நாகமுத்து செல்லையா - இராசம்மா தம்பதியரின் அருமை மருமகளும், நடராசா (ஓய்வுநிலை ஆங்கில ஆசிரிய ஆலோசகர், தென்மராட்சி கல்வி வலயம்) வின் அன்பு மனைவியும், எழில்வேள், அருள்வேள் ஆகியோரின் அன்புத் தாயாரும், கோஷலாவின் அன்பு மாமியாரும், திருவேள், வேளினி, மகிழினி ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்பு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (01.06.2024) சனிக்கிழமை ஆசிரியர் வீதி, சங்கத்தானையில் உள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, மறுதினம் (02.06.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'திருவேளகம்'
ஆசிரியர் வீதி, சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

A-1



## கசிப்புடன்...

பொலிஸாருக்கு வழங்கப்பட்ட புலனாய்வுத் தகவல்களுக்கு அமையவே அந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவரிடம் இருந்து மூன்று புத்தகப்பைகளில் 30 லீற்றருக்கும் அதிகமான கசிப்பு மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபருக்கு எதிரான சட்டநடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ-ம-26-125)

## காணி...

களைச் சுவீகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நில அளவீட்டு நடவடிக்கைகள் மக்களின் எதிர்ப்பு நடவடிக்கையைத் தொடர்ந்து தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

திருவடிநிலைப் பகுதியில் உள்ள நான்கு பரப்புக் காணியை கடற்படைக்காகச் சுவீகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நேற்று அளவீடுகளுக்காக அதிகாரிகள் வந்தபோது, மக்களும், அரசியல்கட்சிகளின் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து தமது வலுவான எதிர்ப்பைப் பதிவுசெய்ததையடுத்து நில அளவைத் திணைக்களத்தினர் அளவீட்டுப் பணிகளைக் கைவிட்டுத் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை - குறித்த எதிர்ப்புப் போராட்டத்தில் காணி உரிமையாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், செல்வராசா கஜேந்திரன், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ-ம-26-125-66-100)

## வாள்வெட்டை...

கேசன்துறை பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தின்போது, வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸ் அதிகாரியொருவர் வாளால் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டவிடயம் சுட்டிக்காட்டப்பட்டது. 'பொலிஸ் அலுவலர் ஒருவரே இவ்வாறு செயற்பட்டால், பொதுமக்களின் பாதுகாப்புக்கு என்ன உத்தரவாதம்?' என்று இதன்போது கேள்வி எழுப்பப்பட்ட நிலையிலேயே, அந்தப் பொலிஸ் அலுவலர், வாள்வெட்டில் ஈடுபடவில்லை என்றும், வாள்வெட்டுக்காக வந்தவர்களிடம் வாளைப் பறித்து அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினார் எனவும் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

ஆயினும் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் குடிபோதையில் வந்ததும், வாளோடு அட்டகாசம் புரிந்ததும் காணொலியாக பதிவு செய்யப்பட்டு சமூக ஊடகங்களிலும் வெளியானமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## தவறான...

விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். யுவதியின் சடலம் இறப்பு விசாரணைக் காகவும் உடற்கூற்றுப் பரிசோதனைக்காகவும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-ம-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் நாடு சிறிதானாலும் படுகொலைகள் அதிகம்

## நீதியமைச்சர் சுட்டிக்காட்டு

இந்த நாடு சிறியதாக இருந்தாலும் படுகொலைகள் பல நிகழ்ந்துள்ளன. ஜே.வி.பி. இரண்டு முறை ஆயுதம் ஏந்தி போராடியதன் விளைவாக பல்லாயிரம் பேர் உயிரிழந்தனர். 30 வருடகால விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தில் சுமார் 70 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். இந்தப் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதை விட மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதே முக்கிய மானது.

-இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச, கண்டியில் நல்லிணக்கக்குழுவுக்கான காரியாலயமொன்றைத் திறந்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்றபோது தெரிவித்தார். கிராமத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தவும் வலுப்படுத்தவும் கிராம அலுவலர் பிரிவுகளில் நல்லிணக்கக் குழுக்கள் நிறுவப்பட்டு வருகின்றன.

நாம் சுதந்திரம் பெற்றபோது இருந்த தேசிய மற்றும் மத உறவுகளைப் பாதுகாக்க முடியாமல் போனதும், நாட்டில் சட்டத்தின் ஆட்சி கடுமையாக உடைக்கப்பட்டதுமே திவாலான நிலைக்குத் தள்ளப்பட முக்கியமான காரணம்.

அரசியல் கட்சித் தலைவர்கள் இதனைப் பயன்படுத்திக் கொண்டு மக்களைப் பல பிரிவினர்களாகப் பிரித்து அந்தப் பிரிவினைகளை பிழைப்புக்காக நடத்தி வருகின்றனர். கிராமத்தில் ஒற்றுமையைக் கட்டியெழுப்புவதன் மூலம் நாட்டின் ஐக்கியம் , நல்லிணக்கத்தை உருவாக்கும் புதிய வேலைத் திட்டத்தை அரசாங்கம் கொண்டு வர எதிர்பார்க்கின்றது - என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)



வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலய மணவாளக் கோல உற்சவமும், ஆயிரத்து 8 சங்காபிசேகமும் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ குகோகுலன் குருக்கள் தலைமையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றன. (எ-25-27)

# உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்காத உள்ளூராட்சி சபைகள்

## கவிஞர் சூரியநிலா ஆதங்கம்

வாசிப்பு மாதம் மற்றும் எழுத்தாளர் கௌரவிப்பு என பல்வேறு நிகழ்வுகளை உள்ளூராட்சிச் சபைகள் நடத்தினாலும், அவர்கள் எமது மண்ணுக்குரிய எழுத்தாளர்களை கண்டு கொள்வது குறைவாகும். எமது எழுத்தாளர்களின் வெளியீடுகளை ஒரே தடவையில் கொள்வனவு செய்து நூலகங்களுக்கு வழங்க ஆவன செய்வதே, ஓர் எழுத்தாளனை ஊக்குவிக்கும் சிறந்த வழியாகும் என கவிஞர் சூரியநிலா தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற நேர்காணல் நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எழுத்தாளனுக்கு சிந்திப்பதற்கோ எழுதுவதற்கோ தடையேதும் இல்லை. ஆனால் தான் எழுதிய எழுத்தாக்கக் கருத்துகளை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதே சவாலாக உள்ளது. அதுவும் பெரிய பிரயத்தனங்களுக்கு மத்தியில் நேரம், பணம் என்பவற்றைச் செலவிட்டு வெளியிடப்படும் எழுத்தாளனொருவனுடைய புத்தகங்களை விலைகொடுத்து வாங்கக்கூடிய வாய்ப்பு அமையாதபோது அவனது வெளியீடு மட்டுமன்றி அடுத்த ஆக்கத்துக்கான முயற்சியும் தோற்றுப்போகிறது. ஒவ்வொரு உள்ளூராட்சிச் சபைகளிடமும் சென்று வேண்டுகோள் விடுத்து ஓரிரண்டு நூல்களாக மாகாணம்முழுவதிலுமுள்ள நூல்நிலையங்களுக்கு புத்தகங்களைக் கொண்டு சென்று அந்த எழுத்தாளரே கொடுப்பதென்பது சாத்தியமற்றது. அத்துடன் சில சபைகள் தெரிந்தவர்களாயின் அதிக எண்ணிக்கையில் கொள்வனவு செய்வதோடு சில சபைகள் எதுவுமே வாங்காது நிராகரித்து அனுப்பியும் விடுகின்றன. இது எழுத்தாளனை அவமரியாதைக்கும், சலிப்புக்கும் உட்படுத்துகிறது. எனவே எமது மண்ணின் எழுத்தாளர்களின் புதிய நூல்கள் அதிகளவில் உருவாகவும், அவர்களை கௌரவப்படுத்தவும் வேண்டுமானால் உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் ஊடாக, உள்ளூராட்சிச் சபைகள் நூல்களைக் கொள்வனவு செய்ய முன்வருவதே சாலச் சிறந்தது- என்றார். (ஒ-25-9)

## கேள்வி அறிவித்தல்
### குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை மற்றும் பராமரிப்பு வேலைத்திட்டம் – 2024
### வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)

1. வலிகாமம் வடக்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக் குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக் கேள்வியாளர்கள், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (**CIDA**) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக் கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக் கேள்வி ஆவணத்தில் **Schedule** (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்கள் கீழே **6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப **9.00** மணியிலிருந்து பி.ப **3.00** மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **செயலாளர், வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை - கொல்லன்கலட்டி, (தொலைபேசி இல: 021-2241130, தொலை நகல் 021-2243688) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.05.31 – 2024.06.13 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையில் சமர்ப்பித்து** ரூ.3000.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம்,பிரதி) **2024.06.14 ஆம்** திகதி **10.00** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி) எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள் அவைகள் மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளரகளின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
8. விலைக் கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6 இல் குறிப்பிடப்பட்ட முகவரியில் பி.ப 2.30 மணிக்கு 2024.06.07 அன்று நடைபெறும்.
9. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப் பீட்டுத் தொகை (ரூ. மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் திகதியிலிருந்து கேள்வி செல்லுடியாகும் | | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் | திகதி | தொகை (ரூ) | தேவைப் படும் காலம் |
| 01 | NP/14/41 (14)/05/01/ 307/PSDG -01/2024 | வீதி புனரமைத்தல் வறுத்தலை விளான் 40 குடியேற்றத்திட்ட வீதி – வறுத்தலைவிளான் | 4.23 | 60 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 15.08.2024 | 43,000.00 | Till 12.09.2024 |
| 02 | NP/14/41 (14)/05/01/ 308/Maint enance-01/2024 | வீதி புனரமைத்தல் காளி கோவில் இணைப்பு வீதிகள் - மல்லாகம் மத்தி | 2.37 | 60 நாட்கள் | C8 & C7 வீதி நிர்மாணம் | 63 நாட்கள் | 15.08.2024 | 24,000.00 | Till 12.09.2024 |
| 03 | NP/14/41 (14)/05/01/ 309/Maint enance-02/2024 | வீதி புனரமைத்தல் 10 ஆம் கட்டை வீதி – மாவிட்டபுரம் | 1.86 | 60 நாட்கள் | C9 & C8 வீதி நிர்மாணம் | 49 நாட்கள் | 01.08.2024 | 19,000.00 | Till 29.08.2024 |

**“விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VAT மற்றும் வேறு வரிகள்) 50 மில்லியனினுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொது நிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும்.**

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)**
**31.05.2024**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிகளைச்...

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது, யாழ்ப்பாணத்தில் பரவலாக முன்னெடுக்கப்படும் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான சி. சிறீதரன், "வலிகாமம் மேற்கு சுழிபுரம் திருவடிநிலையில் இரண்டு குடும்பங்களுக்குச் செந்தமான காணிகளை கடற்படையினர் தங்களின் தேவைக்காக சுவீகரிப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். பொதுமக்களின் விருப்பத்துக்கு மாறாகவே இந்தச் சுவீகரிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் நானும் கலந்துகொண்டுவிட்டே வந்துள்ளேன்" என்று தெரிவித்தார்.

"மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்பட வேண்டும் என்றும், அவற்றைப் படையினருக்கோ அல்லது பொலிஸாருக்கோ வழங்கமுடியாது" என்றும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதையடுத்து, காணி சுவீகரிப்புத் தொடர்பில் அடுத்தகட்ட ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு இறுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும் வரையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காணி சுவீகரிப்பு நடவடிக்கைகளை நிறுத்துமாறு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர்கள் தெரிவித்தனர்.

இணைத்தலைவர்களின் இந்த உத்தரவை தீர்மானமாக நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, மறு அறிவித்தல் வரும்வரையில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன் இராமநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், சிவஞானம் சிறீதரன், செல்வராஜா கஜேந்திரன் மற்றும் வடக்குமாகாண சபை அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம், பொலிஸ், இராணுவம் கடற்படை அதிகாரிகள் திணைக்களத் தலைவர்கள் உட்படப் பலரும் கலந்துகொண்டனர். சுகவீன விடுப்புப் போராட்டம்காரணமாக இலங்கைநிர்வாகசேவை அதிகாரிகள் எவரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-125-26)

## சட்டவிரோதக்...

"அவ்வாறு எந்தக் கட்டங்களும் அமைக்கப்படவில்லை" என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், பதில் மாவட்டச் செயலரின் கூற்றின் உண்மைத் தன்மையை உறுதிசெய்யும் பொருட்டு, உதயனின் ஊடகப் புலனாய்வு அணி தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு நேற்றுச் சென்றிருந்தது. விகாரைக்கு மேலதிகமாக அங்கு அமைக்கப்படும் சட்டவிரோதக் கட்டங்களை எமது ஊடகப் புலனாய்வு அணி அவதானித்ததுடன், அவற்றைப் புகைப்படங்களாகவும் பதிவு செய்தது.

இதன்மூலம் மக்கள் நலனுக்காகப் பாடுபடவேண்டிய ஓர் அதிகாரியான , யாழ். மாவட்டப் பதில் அரச அதிபர் நேற்றைய ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் தவறான, பொய்யானதகவல்களை வழங்கி, எல்லோரையும் ஏமாற்றியுள்ளார் என்று உறுதியாகியுள்ளது. (அ-ம-26)

## மேலதிகக்...

யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரை சட்டவிரோதக் கட்டடம் என்றும், அதை அங்கிருந்து அப்புறப்படுத்துமாறும், பொதுமக்களின் நிலங்களை பொதுமக்களிடமே வழங்குமாறும் வலியுறுத்தி தொடர்ந்து போராட்டங்கள் நடத்தப்பட்டுவருகின்றன. இந்த நிலையில், தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு மேலதிகமாக அங்கு சட்டவிரோதக் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றமை ஏற்கத்தாத ஒன்று என்று நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டை பதில் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் திட்டவட்டமாக மறுத்துள்ளார்.

"நான் 14 நாள்களுக்கு முன்னர் அங்கு சென்று பார்வையிட்டேன். ஆனால், அவ்வாறு எந்தச் சட்டவிரோதக் கட்டங்களும் அமைக்கப்படவில்லை"என்று பதில் மாவட்டச் செயலர் தெரிவித்தார். (அ-ம26-125)

## ஐ.எஸ்ஸுடன்...

ளனர். இந்தியாவின் அஹமதாபாத் விமான நிலையத்தில், அண்மையில் நான்கு இலங்கையர்கள் இந்தியாவின் பயங்கரவாதத் தடுப்பு விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடம் நடத்திய விசாரணைகளின் போது, இந்தியாவில் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருந்தமையும் பாகிஸ்தானில் இருந்து வரவிருந்த உத்தரவுக்காக அவர்கள் காத்திருந்தமையும் தெரியவந்தது.

இந்த விடயத்தில் இந்திய - இலங்கை அதிகாரிகள் இணைந்து செயற்பட்டுவரும் நிலையில் இந்தத் தாக்குதல் முயற்சியுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் மேலும் இருவர் மாவனல்ல பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதானவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-44)


## அம்புலன்ஸ்...

பொருளாதார நெருக்கடி மற்றும் பராமரிப்புச் செலவுகள் காரணமாக அந்தச் சேவையைக் கைவிடவுள்ளதாக மேற்படி தொண்டு நிறுவனம் அறிவித்துள்ளதாக நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதையடுத்து இந்த விடயம் தொடர்பில் பேச்சுகளை மேற்கொள்ளுமாறும், மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் யாழ்ப்பாணம் மாவட்ட பதில் மாவட்டச் செயலருக்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தலைவர் உத்தரவிட்டார்.

தரைவழிப் போக்குவரத்து இல்லாத நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு உள்ளிட்ட தீவுகளில் வாழும் மக்களுக்கு இந்த அம்புலன்ஸ் படகுச் சேவையே பிரதான மருத்துவ மார்க்கமாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-125


# ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இரங்கல் உரை நிகழ்வும்



பிறப்பு
23.11.1954

இறப்பு
22.04.2024

கடந்த 22.04.2024 திங்கட்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர்**
**தேசப்பற்றாளர், சமாதான நீதவான்**
**திரு. இராசதுரை கணேசராசா**
**(JP பத்தர்)**
**(முன்னாள் மாநகரசபை உறுப்பினர்)**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், இரங்கல் உரை நிகழ்வும் நாளை (01.06.2024) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லமான 'ஹஜிஸ் பலஸ்' இல் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**குடும்பத்தினர்.**

**இல.82/2B, சிவப்பிரகாசம் வீதி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

Tel: 0094 7600 12106
What's app : 00447456710501

C5616 A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸாவுக்கு இரங்கும் அரசு எமக்கு இரங்காதமை ஏன்?

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்




வவுனியா, மே 31

காஸா சிறுவர்களுக்காக நிதிதிரட்டும் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு, இறுதிப்போரில் தமிழ்க் குழந்தைகளைக் கொல்லும்போது இரக்கம் வரவில்லையா? என்று காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வவுனியா மாவட்ட வலிந்துகாணாமலாக்கப்பட்ட உறவுகளால் வவுனியா பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றையதினம் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதன்போது அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

இறுதிப்போரின்போது இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களுக்கும், காணாமலாக்கப்பட்ட உறவுகளுக்கும் சர்வதேச நீதியைக்கோரி நாம் தொடர்ச்சியாகப் போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம். எமது போராட்டங்களைத் தடுக்கும் விதத்தில் பல்வேறு அடக்குமுறைகள் இந்த அரசாங்கத்தால் பிரயோகிக்கப்படுகின்றது. எனினும் நீதிக்கான எங்களின் பயணம் தொடரும்.

காஸாவில் இடம்பெற்றுவரும் போரால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்காக உருவாக்கப்பட்ட காஸா நிதியத்துக்கு ஜனாதிபதியால் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதை தமக்கான சர்வதேச ஆதரவைத் திரட்டும் அரசாங்கத்தின் நடவடிக்கையாகவே பார்க்கவேண்டும். ஏனெனில் எமது தமிழ் சிறுவர்கள் பலரை இறுதிப் போரின்போது கையில் ஒப்படைத்திருந்தோம். அதேபோல இறுதிப்போரில் எத்தனை அப்பாவி தமிழ்க் குழந்தைகளைக் கொலைசெய்தனர். அப்போதெல்லாம் இவர்களுக்கு இரக்கம் வரவில்லையா? போரில் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்து, அவயவங்களை இழந்த பிள்ளைகளை இவர்களின் கண்களுக்குத் தெரியவில்லையா? தாங்கள் நடத்திய போர் என்ற படியால் அது அவர்களின் கண்ணுக்குத் தெரியவில்லை - என்றனர். (ம-110-60-56)

வங்கி மீதி வசதிகள்
மற்றும்
விசா ஆலோசனை
சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 173 7684

வேலையாள்கள் தேவை
உணவகமொன்றுக்கு சமையல் மற்றும் ரொட்டி வேலைக்கு ஆள்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 077 317 1908

NEC
யாழ் நகர்
A/L-2026
கலை
வர்த்தகம்
ஆரம்பம்
JUNE 01
சனிக்கிழமை காலை 08.00 மணி
மாணவர்கள் பாடத்தெரிவினை மேற்கொள்வதற்காக இம்மாதக் கட்டணம் அறவிடப்படமாட்டாது
அலுவலக தொடர்பு: 076 535 0999

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி யாழ்ப்பாணம்
K.K.S வீதி சுன்னாகம்
BARATHY
சித்தன் கேணி
(மூன்று நிறுவனங்களிலும்)
A/L 2026
கலை, வர்த்தகப் பிரிவு
நாளை ஆரம்பம்
01.06.2024 சனி
➤ நீங்கள் நன்கு அறிந்த மிகப்பிரபலம் பெற்ற ஆசிரியர்களினால் ஒன்றுஇணைந்து கற்பிக்கப்படுகின்றது.
➤ தாமதியாது நீங்களும் இணைந்து உயர் பெறுபேறுகளைப் பெற்றிடுங்கள்.

நாவலர்
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி சந்தி யாழ்ப்பாணம்
A/L 2026
கலை
வர்த்தகம்
ஆரம்பம் June 01 சனி காலை 8.00 மணி
மாணவர்கள் பாடத்தெரிவினை மேற்கொள்வதற்காக இம் மாதக்கட்டணம் அறவிடப்படமாட்டாது
அலுவலக தொடர்பு: 077 469 6695

TECHNO WORLD
தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ்ப்பாணம்.
A/L 2026
தொழில்நுட்பப் பிரிவு
• ஆரம்பம் - 01.06.2024 (சனிக்கிழமை)
• நேரம் - காலை 8.30
A/L 2024, 2025
வகுப்புகள் நடைபெறுகின்றன
தொடர்புகளுக்கு: 077 017 5346

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் நுணாவில் சாவகச்சேரியில் 14 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
➤ இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
➤ குடியிருப்பு சூழ உள்ள பகுதி.
➤ A9 வீதியில் இருந்து மட்டுவில் செல்லும் றோட் இலுப்பையடி வீதி அரசன் கடை அருகாமை.
➤ பலன் தரும் மரங்கள் உண்டு.
➤ தரகர் தேவையில்லை.
தொடர்பு: 070 4974565 / 070 4207343

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்
A-9 வீதி முகப்புடன் 51 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
➤ இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
➤ பதினெட்டடி பாதை (18)
➤ கைதடிச் சந்தி 100M தூரம்
➤ சித்த வைத்தியசாலை முன்பாக
➤ பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
➤ நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) அனுமதி பெற்றது
குரு: 077-029 4164
077-329 4130
077-294 1521

31ஆம் நாள் நினைவலைகள்
மலர்வு 02.06.1938
உதிர்வு 09.05.2024



நற்குணராசா மனோன்மணி
திதி: சித்திரைமாத அபரபக்க அட்டமி
பூக்களின் நறுமணம் நீ புன்னகையின் இருப்பிடம் நீ
பாக்களினால் உனை எழுதப் பாரினிலே சொற்களில்லை
ஆக்கிய உன்தன் கையை அரவணைத்த தாய் மடியை
தேக்கிய அன்பகத்தை திங்களின் திருமுகத்தைத்
தேடியே நாள்தொலைந்து வாடிய பயிர்களானோம்
பத்தினியாம் பதிவிரதை சென்று இன்று
முப்பத்தொரு நாள் கடந்தும் எங்குமே வெறுமையாச்சே!
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.
குடும்பத்தினர்

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 31.05. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org